65

மாதர் போதினி

No. 245 | மே 1918 | No. 5

8-MAY 1918 MADRAS.

THE SECOND MILE LIFE

இரண்டாவது மைல் ஜீவியம்

இரண்டாவது மைல் ஜீவியமென்றால் என்னவென்றும், நாம் அந்த ஜீவியஞ் செய்கிறோமாவென்றும் சிந்திப்பது நன்மையாகும். 'ஒருவன் உன்னை ஒருமைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டுமைல் தூரம்போ' என்றும், 'நீங்களும் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்' என்றும் நமது ரட்சகர் போதித்தார். இரண்டாம் மைல் ஜீவியம் என்னவென்று இவ்வாக்கியங்களால் அறியலாம். பிறர் வாய்திறந்து நம்மைக் கேட்குங் காரியங்களை மட்டுஞ் செய்வதும் குறிக்கப்பட்ட நமது கடமைகளை நிறைவேற்றுவதும் சாதாரண முதல் மைல் ஜீவியம். நல்ல மனுஷரென்று பெரும்பாலும் அழைக்கப்படும் யாவருக்குள்ளும் இந்த ஜீவியத்தைக் காணலாம். பிறர் வேண்டிக்கொள்ளாதிருக்கும்போது அவர்களுக்கு என்ன தேவையென்று தேடி ஆராய்ந்துசெய்வதும், பிறர் விருப்பத்திற்கும் வேண்டுகோளுக்கும் அதிகமாய்ச் செய்வதும், பதில் செய்யக்கூடாதவர்களுக்கு நன்மைசெய்வதும், கைம்மாறு கருதாமல் பிறருக்கு உபகாரஞ்செய்வதும், தீமைக்குப் பதில் நன்மைசெய்வதும், குறிக்கப்பட்ட கடமைகளையன்றி இலவச உபகார ஊழியஞ் செய்வதும் இரண்டாம் மைல் ஜீவியமாகும்.

இரண்டாம் மைல் ஜீவியம் சாதாரணமானதல்ல, அது மேன்மையான கிறிஸ்தவ உன்னத ஜீவியம். அதை அடைந்தவர்களே

அதின் மேன்மையை அறிந்து உணரக்கூடும். தமது ராஜ்யத்தின் புத்திரர் யாவரும் இப்படிப்பட்ட ஜீவியம் செய்ய ஆண்டவர் அழைக்கிறார். கிறிஸ்து உன்னிலும் என்னிலும் விரும்புவது இந்த ஜீவியமே.

'வானத்தை இலக்காக வைத்தெய்கிறவன் மரத்தை இலக்காக வைக்கிறவனிலும் உயரமாய் எய்வான்' என்ற சொற்படி இரண்டாம் மைல் ஜீவியம் செய்வோர் முதல் மைல் ஜீவியத்தைச் சுலபமாய் நிறைவேற்றலாம். அவர்களுக்கு முதல் மைல் ஜீவியம் பாரமாயிராமல் சுலபமாயிருக்கும். கடமை கஷ்டமாயிராமல் எதிர் பார்க்கும் பிரிய தோழியாகும். இழிவான கடமை இனிதானதாகும். இதுவன்றி இரண்டாவது மைலில் செல்வது ஆனந்த பரவசமாகும்.

இரண்டாவது மைல் ஜீவியம செய்வோருக்கு இவ்வுலகமே மோட்சமாகும். முதல் மைல்காரர் பூலோகவாசிகள், இரண்டாம் மைல்காரரோ பரலோகவாசிகள். முதல் மைலைக் கடந்து ஜீவிப்பதால் அவர்கள் பாக்கியவான்கள், எந்நேரமும் துதி தோத்திரங்களால் நிறைந்திருப்பார்கள். துன்பம் இன்பமாகும். மனுஷரில் இவர்களுக்குச் சத்துருக்களே கிடையாது. கிறிஸ்துவின் அன்பு நிறைந்தவர்களாதலால் எவரும் இவருக்கு மித்துருக்களே. பாரபட்சமின்றி சகலரிலும் அன்புகூருவார்கள். பரலோகத்திலுள்ள பிதாவின் பிள்ளைகளைப்போல் பூரண சற்குணராயிருப்பார்கள். கிறிஸ்துவின் ஒளி அவர்களில் இலங்கும். தாங்கள் தங்குமிடம் போகுமிடமெங்கும் ஆசீர்வாதமாயிருப்பார்கள்.

இதை வாசிக்கிற சகோதரிகளில் இந்த ஜீவியம் செய்துவருவோர் தங்கள் அனுபோக சாட்சியை எழுதியனுப்பினால் பெயர் காட்டாமல் பிரசுரிப்போம்.

STUDIES FROM PLANT LIFE

தாபரவர்க்கத்திலிருந்து கற்றுக்கொள்ளும் பாடங்கள்

குயவன் தன்னுடைய கைகளில் களிமண்ணை யெடுத்து அதைப் பாத்திரமாக வனையும்போது பாத்திரத்தின் அளவையும் மாதிரியையும் பார்த்து அவனுடைய நோக்கத்தை அறிந்துகொள்ளலாம். நாம் ஒருவரையொருவர் பார்க்கும்பொழுதும் அப்படியே நம்மைப் படைத்த தேவனுடைய நோக்கத்தையும் அறிவது கஷ்டமல்ல.

பார்க்க இரண்டு கண்கள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை களை உபயோகிக்க அவர் சித்தங்கொண்டிருக்கிறாரென்பது திண் ணம். அவைகளைச் சரியாய் உபயோகிக்கிறோமாவென்று ஆலோ சித்து அறிவது உசிதமுறையாகும்.

சிறுவயது முதல் முதுமை பரியந்தம் சிந்தனையற்றவர்களாய் ஜீவித்து மரணமடைபவர்கள் அநேகராதலால், மாதர்கள் தங்களு டைய கண்களைச் சரியாய் உபயோகிக்கப் பயிற்றவேண்டுமென் பதே இந்த வாசகத்தின் நோக்கம். செடி கொடிகளைப்பற்றி சில பொதுவான குறிப்புகளைச் சொல்லி அக்குறிப்புகளை முன்னிட்டு ஆலோசிப்போம்.

வனாந்தரங்களைக் கடப்பவர்கள் சிலவேளைகளில் பச்சையான செடிகளையே காண்பதரிது. அநேக மைல்களுக்கு ஒரு முறை பேரீச்சம் மரங்கள் மாத்திரம் தலைகாட்டும். அவ்விடங்களில் செடி கள் வளராதிருப்பதற்குக் காரணம் தண்ணீரில்லாமையே. போஷிக் கப்படாத ஆத்துமாவும் சீக்கிரத்தில் முடிவடையும். இருண்ட அறையில் வளர்க்கப்படுஞ் செடி மெல்லியதாயும் வெளுத்ததாயு மிருப்பதைக் காணலாம். நம்முடைய ஆத்தும வளர்ச்சியும் பாவ மாகிய இருளால் பலங்குன்றிப்போகும். சூரியவெளிச்சம் செடி களுக்கு இன்றியமையாததுபோல சுவிசேஷ ஒளி கிறிஸ்து வாகிய நீதியின் சூரியனிலிருந்து புறப்பட்டு ஆத்துமாவை வளரச் செய்யும்.

நல்ல செடிகள் சாதாரணமாய் மெதுவாகவும், முள்ளுள்ள செடி களோ வெகு சீக்கிரத்திலும் விர்த்தியாகும். அவ்வண்ணமே நன்மை உலகத்தில் படிப்படியாய்த்தான் பெருககூடும், தீமையோ சீக் கிரம் பரவும். வேதாகமத்திலுள்ள விதைக்கிறவனுடைய உவமை யில் முட்செடிகள் சீக்கிரம் வளர்ந்து மற்ற செடிகளையுங் கெடுப் பதை நாம் பார்க்கலாம்.

சில மரங்கள் உயர்ந்து பருத்து வளருகின்றன. சில கொடிகள் தரையில் படருகின்றன. உலகத்தில் பராக்கிரமசாலிகளும் பல வீனர்களுமுண்டு. ஆனால் பலவீனரை அவமதிக்கவும் பலவான் களை மதிக்கவுஞ் செய்வது ஞானமல்ல. ஆலமரம் பெரிதாயிருந்த போதிலும் அதில் பழுக்கும் பழங்கள் சிறியவைகளாகவேயிருக்கும். தரையில் படரும் வெள்ளரிக் கொடிக்கோ பெரிய பழங்களுண்டு. தேவன் அற்பமானவர்களைக்கொண்டு தமக்கு மகிமையை யுண்டு பண்ண வல்லவராயிருக்கிறார்.

செடிகளில் வளரும் புஷ்பங்களைப் பார்ப்போம். அவைகளின் அழகு நம்மை எவ்வளவாக சந்தோஷப்படுத்துகிறது! நாம் மற்றவர்

களைச் சந்தோஷப்படுத்த என்ன செய்திருக்கிறோம்? புஷ்பங்கள் எவ்வளவு வாசனையுள்ளவைகளாயிருக்கின்றன! எஜமானுடைய வீட்டை அலங்கரிக்க அவைகள் உபயோகப்படுகிறதுபோல நாம் நம்மைப் படைத்த தேவனுக்கு அலங்காரமாயிருக்கவேண்டியது முறையல்லவோ? இன்றைக்கிருந்து நாளைக்கு அழியும் புஷ்பங்களை உடுத்துவிக்கும் தேவன் தம்முடைய பிள்ளைகளை உடுத்துவிப்பது நிச்சயமே.

கனிவர்க்கங்களைப் பார்த்தாலும் அவைகளின் அழகும் உருசியும், அவைகளை உண்டாக்கின தேவனுடைய மகிமையையும் ஞானத்தையும் வெளிப்படுத்துகின்றன. காய்களாயிருக்கையில் கடினமாயும் உருசியற்றவைகளாயுமிருக்கின்றன, காலம் நிறைவேறும்பொழுது அவைகள் நிறம் மாறி ருசியுள்ளவைகளாகின்றன, எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. தேவன் நம்மை அவருடைய வேலைக்காக உபயோகப்படுத்த விரும்புகிறார், ஆனால் அதற்கும் படிப்படியாய்த்தான் அழைக்கிறார். அவருடைய காலம் வரும்போது நம்மூலமாய் அவருடைய நாமத்தை வெளிப்படுத்துவார்.

மேற்கூறப்பட்டுள்ள குறிப்புகள் புற்பூண்டுகளிலிருந்து கற்றுக்கொள்ளும் பாடங்களையெல்லாம் வெளிப்படுத்திவிட்டனவென்று சொல்லத்துணியோம். அவைகள் நாம் காணும் சில காரியங்களிலுள்ள தேவனுடைய மகிமையைக் காணும்பொருட்டு எடுத்துரைக்கப்பட்டன. இவைகளை மனத்தில் வைத்து கவனிப்போமாகில் பெருநன்மை பயக்கும் அநேக பாடங்கள் புலப்படும்.

நமக்குப் புலப்படும் போதனைகளோடு வேதபுத்தகத்தில் சொல்லியிருக்கும், லீலி புஷ்பம்; அத்திமரம், திராட்சக்கொடி, களைகள், கடுகின் விதை, முதலியவைகளைப்பற்றி வாசித்து அவைகளிலிருந்து படிக்கும் பாடங்களை அனுபவத்தில் கொண்டுசெலுத்துவோமாக.

ஒவ்வொருவரும் தங்களுக்கு இஷ்டமான காரியங்களில் எல்லாம் படைத்த தேவனுடைய மகிமையைக் காண்பது கஷ்டமல்ல. அவருடைய ஞானம் எல்லாவற்றிலும் வெளிப்படுத்தப்படுகிறது. கண்களிருந்தும் காணாதவர்களாயிராமல் அவருடைய மகத்துவத்தைக் காண முயலுவோமாக.

'Avis.'

HOW MOTHERS CAN BRING THEIR CHILDREN TO CHRIST

சிறுபிள்ளைகளைத் தாய்மார் எப்படி கிறிஸ்துவிடம் கொண்டுவரலாம்

(தொடர்ச்சி)

நமது அருள்நாதராகிய இயேசுகிறிஸ்து, இந்த சிறியரில் எந்தப் பிள்ளையையாவது தம்மிடம் கொண்டுவரக்கூடாதபடிக்கு தகாத ஜீவியத்தால் இடறல் உண்டாக்கும் மனுஷருடைய கழுத்தில் திரிகைகல்லின் மேல்பாகத்தைக்கட்டி சமுத்திரத்தின் ஆழத்தில் மனுஷரின் பார்வையில் இல்லாதபடி அமிழ்த்திவிடுவதே சரி என்றும், அதுவே அவர்கள் அடையும் தண்டனை என்றும் மகாஞானமாய் உரைத்தார். இயேசுவானவர் தாய்மாரே, உங்கள் பிள்ளைகளைக் கொண்டுவாருங்கள், நான் அவர்களைத் தொட்டு ஆசீர்வதிக்கட்டும் என்று சொன்னார். பிள்ளைகளைக் கொண்டுபோவது விசேஷமாய் தாய்மார் பொறுப்பு. 4 வயது முதல் 8 வயது வரையில் பிள்ளைகளுக்கு வீடும் பாடசாலையும் தான், கற்குமிடம்; தாயும் உபாத்தியாரும் தான், ஆசான். இவ்விஷயத்தில் தாய் தகுந்த சிரத்தை எடுத்து பிள்ளைகளைக் கவனிக்கவேண்டும். 'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை' என்றபடி, அன்னாள் இருதயத்தை ஆண்டவருக்கு கொடுக்கும் அன்னாளாயிராவிட்டால் சாமுவேல் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாக முடியுமா? நல்ல தாய்மார் திருச்சபையில் பெருகும் மட்டும் நல்ல பிள்ளைகள் வீட்டில் வளர்வது அருமை. கர்த்தருக்கு எற்கும் சிட்சையில் பிள்ளைகளை வளர்த்துவிட்டவள், சாலமோன் ஞானியிலும் கெட்டிக்காரியாகாளோ? பிள்ளைகள் கெட்டவர்களானால் உன்னை எலியின் மனைவியின் சகோதரி என்று அழைக்கக் கூடாதோ? முந்தின சஞ்சிகையில், தாய்மார் வேதத்தை ஊட்டுவதாலும், பாட்டுகளைப் பாடி அல்லது படித்துக்கொடுப்பதாலும், ஊக்கமான ஜெபபழக்கத்தாலும் பிள்ளைகளைக் கொண்டுவரலாம் என்று அறிந்தோம்.

நான்காவது வழி தாய்மாரின் குடும்ப ஜீவியமே. தாயின் சிறந்த மாதிரி பிள்ளைக்குச் சட்டம். மரத்தின் கனி அதன் அடியில் விழும். தாயைத் தண்ணீர் துறையில் கண்டால் பிள்ளையை வீட்டில் பார்க்க வேண்டியதில்லை. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை, பார்த்ததைச்செய்யும் மனுப்பிள்ளை. பிள்ளைகளைக் கிட்டவைத்துக்

கொண்டு அயல்வீட்டுத் தீயகாரியங்களைப் பேசி அவர்கள் கண் காண சண்டையிட்டுக் குடித்து வெறித்து சிரித்து நிற்கும் பெற்றோர் களைப் பார்த்துநிற்கும் பிள்ளைகள் நல்லவழியில் நடப்பார்கள் என்று எதிர்பார்க்கலாமோ? தாயும் தகப்பனும் ஆலயத்திற்குப் போகா மலிருந்தால் பிள்ளை ஆராதனையை நாடுமோ? குடும்ப ஜெபம் நடத்தி பாடசாலைக்கு அனுப்பாத தாயின் வார்த்தைக்குப் பிள்ளை கீழ்ப்படியுமோ?

ஒரு நண்டு தன்குஞ்சுகளை வளைக்கு கூட்டிச்செல்லும்போது பின் னால் திரும்பிப்பார்த்து மகாகோபமான பார்வையுடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு, ' அடா கெட்ட பிள்ளைகளே, நீங்கள் ஏன் இப் படி ஒருபக்கமாய்ச் சாய்ந்து நடக்கிறீர்கள், கண்ணுக்கு நேராய் ஏன் நடக்கவில்லை?' என்று மகா விசனத்துடன் கோபித்தது. அதற்கு அந்தக் குஞ்சுகளில் ஒன்று, ' அம்மா தாயே, கோபிக்காதே, சற்று பொறுத்துக் கேள். நீயும் எங்களைப்போல்தானே பக்கமாய்ச் சாய்ந்து நடக்கிறாய், நாங்கள் உன்னைப் பின்பற்றித்தானே நடக்கவேண்டும். எங்கள்பேரில் குற்றம் இல்லையே' என்று புத்தி புகட்டியது. பெற் றோர் கெட்டவர்களாய் ஜீவித்துக்கொண்டு பிள்ளைகள் தேவபக்தியில் பரிசுத்த ஜீவியத்தில் வளரவில்லையே என்று பிரலாபித்தால், புத்தி யற்ற நண்டுக்குச் சமமானவர்கள். அம்மா சகோதரியே, உன்பிள்ளை மெய்பேச விரும்புவாயானால் நீயே சத்தியத்தின் சட்டமாயிரு. பிள்ளை எல்லா விஷயத்திலும் ஒழுங்காய் நடக்க ஆசைப்பட்டால் நீயே அந்த ஒழுங்கைக் கையாடு. பிள்ளைக்காக கர்த்தரை விசுவா சித்து அவர் திருவாக்கை நேசித்து அவரின் பாதத்தை ஆசித்து பரி சுத்த ஜீவியத்தை யோசித்து நடக்கும் பெற்றோர், ' இதோ நானும், கர்த் தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் இஸ்ரவேலின் அடையாளங் களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்' என்று சொல்லக்கூடி யவர்கள். இப்படிப்பட்டவரால் தமிழ்நாட்டுச் சபை நிறைந்திருந்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும். பிள்ளைகள் கற்கும் மாணக்கர்களாய் மாத்திரமல்ல, கற்றுக் கொடுக்கும் ஆசான்களாயும் இருக்கிறார்கள். பெற்றோர் மனக்கவலையுடன் இருக்கும்போது பிள்ளைகள் தங்களு டன் விளையாட அழைப்பார்கள். துக்கமாயிருக்கும்போது பாடும் படி கேட்பார்கள். மணிச்சத்தம் கேட்டவுடன் கோவிலுக்குப்போகக் கூப்பிடுவார்கள். பணத்தைக் கண்டவுடன் காணிக்கை போட காசு கேட்பார்கள். வறுமையாலும் வியாதியாலும் கஷ்டப்படுகிறவர் களுக்கு உதவிசெய்ய மனதில்லாதிருக்கும்போது அவர்களுக்கு உதவிசெய்யக் கேட்பார்கள். குருடர், நொண்டிகள், ஏழைகள், புண்பிடித்த குதிரை, நாய், கழுதை இவைகளைத் தெருவில் கண்டால்

அவைகளுக்கு உதவிசெய்யக் கெஞ்சுவார்கள். அழுகிறவர்களைக் கண்டால் அழுவார்கள். பாடசாலையில் படித்த பாடங்களை, கதைகளை வீட்டில் மற்றவர்களுக்குச் சொல்லும்படி ஆசைப்படுவார்கள். இப்படிப்பட்ட சமயத்தில், பிள்ளையின் ஆழ்ந்த புத்தியையும் மனத்தின் எண்ணங்களையும் கண்டு சமயத்திற்குத்தக்கவாறு அவர்களுடன் அனுதாபப்படும் சமயத்தில் அனுதாபப்படவும் சந்தோஷிக்கும் சமயத்தில் அவர்களுடன் சிரித்து விளையாடவும் ஆயத்தமுடையவர்களாய் இருக்கவேண்டும்.

ஐந்தாவது தாய்மார் அடையவேண்டிய பக்குவம். பல நூல் கற்பதே அடையும் பக்குவம். தாய்மாரில் சிலர் வேதம் படித்து வேதாகம ஸ்திரீகளாகவும், உபாத்திமாரின் பரீட்சை கொடுத்த உபாத்தினிகளாகவும், வைத்திய முறைகளைப் படித்த மருத்துவச்சிகளாகவும் வைத்திய சாஸ்திரங்களைப் படித்த வைத்தியராகவும் இருக்கலாம். இவர்களெல்லாரும் வேதசாஸ்திரங்களையும் பல நூல்களையுங் கற்ற பண்டிதர்களாயிராவிட்டால் பிள்ளைகளுக்கு என்ன நன்மை செய்வார்கள்? எப்படிப் போதிப்பார்கள்? இவ்விஷயத்தில், தமிழ்நாட்டு தாய்களுக்கு பிள்ளைகளை வளர்க்கும் சிறிய, பெரிய, அரிய நூல்கள் பல உள; அவைகளைக் கவலையாய்த் தேடி, கருத்தாய்ப் படித்து, உரித்தாய்க் கையாடவேண்டும். வேதத்தில் நீதிமொழிகள், எஸ்தர், ரூத், அடிமைப் பெண், தெபோராள், யாகேல், அன்னாள், மரியாள், லோவிசாள் முதலியவர்கள் சரித்திரமும், எட்வர்ட் பேய்சன் ஐயர் எழுதிய 'பிள்ளைகள் குணப்படுதல்,' 'என் பிள்ளைகள்' 1–ம், 2–ம் பாகம், 'புஷ்பக்கூடை,' 'முற்காலத்து பிள்ளைகள்,' 'இயேசுவின் இளமைப்பக்தி,' 'பிள்ளை வளர்ப்பு,' 'பாலர் பிரசங்கம்,' 'வேதஸ்திரீகள்,' 'இராணியார் சரித்திரம்,' 'அங்கிலேய இல்லற ஒழுக்கம்,' 'மேரி ஜோன்ஸ் வேதாகமம்,' 'அடிமைப் பெண் கதை,' 'மோட்சபிரயாணியின் மனைவியும் பிள்ளையும்,' 'ஜெசிக்காளின் சரித்திரம்,' 'மாதர் ஜோதி,' 'மாதர் கும்மி' 'எஸ்தர் அரசாணிமாலை,' 'ஈசாக்கு ரெபேக்காள் கலியாணம்,' 'குடும்ப ஜெபத்துணை, 'சட்டதிட்டம்', 'சாஸ்திரக்கும்மி,' 'தேவபக்தியின் வளர்ச்சி,' 'காலை மணிச்சத்தம்,' 'சிறு தலையணைகள்,' இன்னும் பலநூல்கள் உண்டு. இவைகள் நமது C.L.S., R.T.B. முதலிய புஸ்தகசாலைகளிலும், வெகு சுலபமாக 3 பைசா முதல் 4 அணு வரையிலும் கொடுத்து வாங்கி வாசிக்கலாம். இந்தப் பக்குவம் அடைந்த ஒரு தாய் வீட்டுக்கு வெளிச்சமாயும், சபைக்குத் தீபமாயும், கோவிலுக்குக் குருவாயும், பிள்ளைகளுக்குப் பெரும் பாக்கியமாயும், புருஷனுக்குக் கிரீடமாயும், தேசத்திற்கு வாசமாயும் விளங்குகிறதோடு,

அநேக சிறுவர்களை மோட்சத்திற்குக் கொண்டுபோகும் ஏணியின் படிக்கட்டுகளாய் உயர்ந்து விளங்குவாள். அப்படிப்பட்ட தாய்க்கு பத்து பிள்ளைகள் இருந்தாலும் இவைகள் கர்த்தரால் கொடுத்த பெரும் பாக்கியங்கள் என்று குதுகலித்து ஆண்டவருக்கு ஸ்துதியும் புகழ்ச்சியும் செலுத்துவாள்.

மகாராணியாரின் பிரதமமந்திரியாகிய கிளாட்ஸ்டன் (Gladstone) பிரபு தான் உன்னத நிலைமையை அடைந்ததற்கு, ஊக்கமான ஜெபமுடைய தன் தாயே காரணம் என்றார். வித்வசிரோமணிகளான அநேக மகான்களும், பக்திமான்களான போதகமாரும், உயிரை உவப்புடன் அளித்த மிஷனெரிமாரும், தங்கள் தாய்மாரின் ஓயாக் கவலையும், ஒழுங்கான ஜீவியமும், இப்படிச் செய்தன என்று கூறிப்போயிருக்கிறார்கள். ஆகையால் பிரிய சகோதரியே, உன் பிள்ளை உலகத்தை யடக்கும் வீரனும், தேசத்தை யாளும் மன்னனும், சபையை நடத்தும் போதகனும், கல்வியைப் புகட்டும் பண்டிதனும், வியாதியைத் தீர்க்கும் வைத்தியனும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறும் மிஷனெரியாயும், கடைசியாக அநேகருக்கு மாதிரியான விசுவாசியாயும் வருவான் என்று விசுவாசித்து, பெருமனதுடன் வளர்த்துவா.

(இன்னும் வரும்.)

கிறிஸ்தியான் டி. டாசன்.

SOME IMPORTANT DUTIES OF A WIFE

பெண்சாதி செய்யவேண்டிய பிரதான கடமைகள்

1. ஸ்திரீகளுக்குரிய கடமைகளில் ஒழுக்கமும் அடக்கமுமே முதன்மையானது.

2. ஸ்திரீயானவள் தன் கணவன் தனக்கு மேலான மேன்மையுடையவன் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

3. மற்றெல்லா சிநேகிதர் இனத்தவரிலும் தன் புருஷனே தனக்குரியவனென்றும், தன் கனத்துக்கும் அன்புக்கும் பாத்தியமுடையவனென்றும் எண்ணிக்கொள்ளவேண்டும்.

4. தன் உள்ளத்தில் உத்தம மனைவிக்கேற்ற பயமும் வணக்கமும் இருக்கவேண்டும்.

5. மரியாதையான சுத்த உடை உடுத்தி, சாந்தம் வணக்கம் முதலான சுகுணங்களுள்ளவளாய்க் கற்புநிலையிலிருக்கவேண்டும்.

6. தன் புருஷனிடத்திலாவது, அவரைக்குறித்து மற்றவர்களிடத்திலாவது பேசும்போது, வணக்கத்துடன் பேசவேண்டும்.

7. எல்லா விஷயத்திலும் தன் புருஷனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

8. தன் வீட்டுப்பண்டங்களை இரவலாகக்கொடுத்து வாங்குவதிலும், வீட்டுக்குரிய செலவு செய்வதிலும், பிள்ளைகள் வேலைக்காரர் முதலானவர்களை நடத்துவதிலும், பொருட்கள் வாங்குவதிலும், விருந்து முதலானவை நடத்துவதிலும், புருஷன் உத்தரவின்றியாவது, அவர் உத்தரவுக்கு விரோதமாயாவது யாதொன்றுஞ் செய்யாதிருக்கவேண்டும்.

9. தன் புருஷன் வசிக்க விரும்புமிடத்தில் சமாதானமாய் வசிப்பதாலும், அவர் அழைக்கும்போதெல்லாம் தடையின்றி வருவதாலும், அவர் இடும் வேலைகளை மனவுற்சாகமாய்ச் செய்வதாலும் அவர் இஷ்டப்படி நடப்பவளென்று காட்டவேண்டும்.

10. தன் புருஷனுக்குப் பிரியமில்லாத விஷயத்தை யறிந்து விட்டுவிடவேண்டும். அது நல்விஷயமானல் ஜெபத்தாலும் அன்பாலும் இணங்கச்செய்யவேண்டும்.

11. தன் கணவனது தற்கால நிருவாகங்கள் எத்தன்மையதாயிருந்தாலும், அவைகளில் மனரம்மியமுடையவளாய் வரவுக்குத் தக்க செலவு ஞானமாய்ச் செய்யவேண்டும்.

12. வீட்டை எப்போதும் சுத்தமாயும் ஒழுங்காயும் கூடியவரை அலங்காரமாயும் வைக்கவேண்டும்.

13. தன் கையால் செய்யக்கூடிய தையல்வேலை சமையல் வேலை நன்குசெய்து, வஸ்திரங்கள் பொத்தலில்லாமலிருக்கப் பார்த்து, உருசியாய் ஆகாரஞ் சித்தப்படுத்தவேண்டும்.

PRAISE AND PRAYER

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி

1. கர்த்தாதி கர்த்தனே, கற்பகமே, மெய்ப்பொருளே
கடையேன் கடைப் பிடிப்பே,
கருணையா னந்தனே, கதலி நறுங்கனியே,
காட்சிதரும் மெய் ஜோதியே,

விற்பன விவேகனே, விண்மணியே, கண்மணியே,
வேதாந்த ஆனந்தனே,
விண்ணவர்க் கமுதமே, மதுரமே, நறுந்தேனே,
வீயாமற் காக்கும் மன்னவே,
அற்புதக் கிருபையே, அற்பனுக் கையனே,
அப்பனே, அண்ணாவியே,
ஆயனே, 'நேயனே, தூயனே, சேயனே,
ஆனந்த அருள் வாரியே,
தற்பொரு விலாதகிரு பாகர தயாபர
தத்துவத்தி னுத்தமனே!
தாதா கிறிஸ்துவெனும் நாதா எனக்குனது
பாதார விந்தகதி தாதா!

2. கோமேதகம் நீயே, கோதிலா அஸ்பியே,
குணமான கெம்பு நீயே,
குன்று மாணிக்கமே, வைடூரியக் கோவை,
கோர்த்ததிரு வயிரமணி,
பூமாதின் மேலுள்ள ஆசையா லுன்னுடைய
புண்ணிய லோகம் விட்டுப்
பூதலம் வகின நாகமணி, மார்த்தாண்டா,
புனித ரத்தினக் கம்பியே,
சாமான்ய தேவர்போல் எண்ணாம லுன்னைநான்
சாஷ்டாங்க தண்டஞ் செய்வேன்.
சற்குருவே, உன்னுடைய பொற்பாத கமலங்கள்
தரிசனை செய்து வாழ்வேன்,
தாமாய் நேசிப்போனே, தாழ்ச்சியில் என்னுயர்வே,
தளர்ச்சியில் என் ஜீவனே,
தாதா கிறிஸ்துவெனும் நாதா எனக்குனது
பாதார விந்தகதி தாதா!

3. சிங்கார வனமே, என் செல்வமே கல்வியே,
சிறந்த பரதீசு நீயே,
சித்திரக் காவே, என் பத்திரச் சோலையே,
சீர்மிகு ஜீவ தருவே,
அங்காதி பாதா, என் ரணவாதை நீக்கவே
அருமருந் தாயுதித்தாய்,
அருங்கந்த வர்க்கமே, நருஞ்சாரோனின் ரோஜா,
ஆனந்தமருள் தென்றலே,

எங்கெதியின் தோட்டம், என்நாட்டம், என்தேட்டம்,
என் பெருமூச்சு நீயே,
என்லீலிப் புஷ்பமே சந்தன விருட்சமே,
என் திராட்சத் தோட்டமே,
சங்கார தூதனைக் காணும்போ துன்மார்பில்
சார்ந்திருக்க வரம்தா!
தாதா கிறிஸ்துவெனும் நாதா எனக்குனது
பாதார விந்தகதி தாதா!

4. கரும்பி னிறையமுதே, கற்கண்டே, சர்க்கரையே,
கருணை மிகு காவலனே,
காட்சிதரு மீசனே, மீட்சிதரும் நேசனே,
கவலையொழி பவநாசனே,
பெரும்பாவி யாமெனைப் பேர்சொல்லியே அழைத்த
பேரன்பின் சொரூபி நீயே.
பேதைக் குன்னையல்லால் ஆதரவு வேறில்லை
பேரின்ப ஆனந்தனே,
அருந்து மாகாரம்நீ, ஆடைநீ, அணிகலன்நீ,
அருஞ் ஜீவபானம் நீயே,
அத்தனே, என்னுடைய உத்தம கணவன்நீ,
அடியேனின் பிராண நாதா,
தருவின் கனிபறித்த தாயால் விளைந்தவினை
தகனிக்க வந்த பானே,
தாதா கிறிஸ்துவெனும் நாதா எனக்குனது
பாதார விந்தகதி தாதா!

5. பதியும்நீ, மதியும்நீ, கதியும்நீ, நிதியும்நீ,
பாணரின் துதியும் நீயே,
பாவ விநாசன்நீ, பாவிகளின் நேசன்நீ,
பரம ஆசானும் நீயே,
சதிசெயும் பேய்மதம் தணித்ததின் சிரசையும்
சங்காரம் செய்த தேவே,
சாத்தானின் சோதனை எல்லாம் ஜெயிக்கவே
தக்க பெலன் நீயருளுவாய்!
சுதியுடன் உன்னுட திருநாமம் என்றைக்கும்
துதிக்கவரம் தந்து காப்பாய்!
ஜோதியே, சுடரே, சுடர்க்கொழுந்தே, எனது
சோகம் நீக்குங் கருணையே,

ததிகால மென்னிலே கனிநிறைந் திருக்கவே
தக்க பக்குவஞ் செய்வாயே!
தாதா கிறிஸ்துவெனும் நாதா எனக்குனது
பாதார விந்தகதி தாதா!

6. துக்கத்தி லாறுதல், துயரத்தில் நம்பிக்கை,
தூக்கத்திலென் சொற்பனம்,
தூற்றப் படும்போது தேற்றும் சகோதரன்,
துன்னர் பகைக் கொதுக்கு,
பக்கத்தி லென்துணை, பகலிலென் சிந்தனை,
பாதையில் என் வெளிச்சம்,
பசியிலென் போஜனம், புசலிலென் நங்கூரம்,
பலயீனத்தில் என் பெலன்,
விக்கினத்தில் அரண், வியாதியில் என்சுகம்,
வீய்கையில் என் ஜீவன்நீ,
விழிப்பிலென் வாஞ்சைநீ களிப்பிலென் கருத்துநீ,
விபுத விநோதன் நீயே!
தக்கணப் பக்கத்தில் தமியனை நிறுத்தியே
தருவாயுன் ஆசீர்வாதம்!
தாதா கிறிஸ்துவெனும் நாதா எனக்குனது
பாதார விந்தகதி தாதா!

THE ARMENIANS

அர்மீனியர் பரிதாபம்

கருங்கடலுக்கும் காக்கஸஸ் மலைகளுக்கும் தெற்கேயுள்ள நாட்டுக்கு அர்மீனியா என்று பேர். பாரஸீகம், ருஷியா, துருக்கி என்ற மூன்று ராஜாங்கத்தாரும் இந்நாட்டைத் தங்களுக்குள்ளே கூறிட்டிருந்தனர்.

அர்மீனியா சபை பரி. பர்த்தொலோமேயு, பரி. மத்தேயு என்பவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதாகப் பாரம்பரியம். கி. பி. 110-ல் இச்சபைக்குண்டான துன்பத்தைப்பற்றி கிரந்த ஆதாரமுண்டு. நான்காம் நூற்றாண்டுக்குள்ளாக அர்மீனிய ஜாதியாரனைவரும் கிறிஸ்தவர்களாகிவிட்டார்கள். ராஜாங்கத்தின் மதம் கிறிஸ்துமதம் என்று பூலோகத்தில் முதல் முதல் பறைசாற்றின தேசம் அர்மீனியா தேசமே.

கீழ்தேசத்துச் சபைகளில் அர்மீனியா சபையைப்போல பலத்த சபை வேறொன்றுமில்லை. அர்மீனியர் பெருத்த வியாபாரிகள், தனவந்தர். கிரமமாயும் அமைதியாயும் ஜீவனார்த்தம் பண்ணுகிறவர்கள். பலதேசங்களுக்கும் போக்குவரவுள்ளவர்கள். எங்கெங்கே போனாலும் அங்கங்கெல்லாம் சன்மார்க்கரெனப் பேரெடுத்தவர்கள். அர்மீனியர் பொதுவாய்க் கைத்தொழிலில் திறமையுள்ளவர்கள், முயற்சியுடையோர், புத்திக்கூர்மையும் விடாமுயற்சியு முடையவர்கள். தொழிற்றுறைகளில் சமர்த்தர்.

இப்பேர்ப்பட்ட ஜனங்கள்தான் துருக்கியரால் பல்லாண்டுகளாக கொடிய துன்பத்துக்குள்ளாக்கப்பட்டவர்கள். துருக்கியரால் இவர்கள் அனுபவித்திருக்கும் உபத்திரவத்தை நாவினால் வர்ணிக்க முடியாது. சுமார் இருபது வருஷத்துக்குமுன் (1895, 1896) இவர்கள் அடைந்த துன்பம் அக்காலத்துப் பத்திரிகைகளைப் படித்தவர்களுக்கு ஞாபகமிருக்கும். குருமார் நிஷ்டூர இம்சையடைந்தார்கள். மார்க்கத்தை மறுதலிக்க மனமற்று அநேகர் பட்டயத்துக்கிரையானார்கள். புருஷர், ஸ்திரீகள் சிறைச்சாலைகளில் கொல்லப்பட்டார்கள். ஆலயங்களில் ஜெபஆராதனைக்கு வந்திருக்கும் சமயத்தில் கொலையுண்ட ஆண்கள், பெண்கள் ஏராளம். கோவில்கள் கொள்ளையிடப்பட்டன; சன்னியாசி மடங்கள் தீக்கொளுத்தப்பட்டன; பாடசாலைகள், வீடுகள் பாழாக்கப்பட்டன. அவ்விரண்டு வருஷத்திலும் மாத்திரம் மொத்தம் வன்கொலையால் உயிர்துறந்தவர்கள் 50,000-க்கு மேல். நூற்றுக்கணக்கானவர்கள் பலவந்தமாய் மகம்மது மார்க்கத்தில் சேர்க்கப்பட்டார்கள். பொருள் நஷ்டமடைந்து தரித்திரரானவர்களுக்குக் கணக்கில்லை. வீடு, சொத்து, கட்டிடம் அழிவு இவ்வளவென்றில்லை.

1895-ம் ஆண்டின் துன்பம் கொடிதாயிருந்தபோதிலும், 1915-ம் வருஷத்தின் கொடுமைக்கு அது இணையாகாது. துருக்கி யுத்தத்தில் பிரவேசித்தது. பிரான்சு, ருஷியா, இங்கிலாந்து அர்மீனியருக்குச் சகாயஞ்செய்ய வழியில்லை. ஆகவே, துருக்கி, ராஜாங்கத்தைக் கைக்குள் வைத்திருந்த சண்டாளர் இதுதான் சமயமென்று நினைத்து, துருக்கி ராஜ்யமெங்குமுள்ள அர்மீனிய ஜனத்தை வேரறுக்க யத்தனித்தார்கள். ஏற்கனவே கொலைக்குவேண்டிய திட்டவட்டமான ஏற்பாடுகள் செய்து, வெகு சிரத்தையுடன் தங்கள் குரூர எண்ணங்களை நிறைவேற்றி முடித்தார்கள். அர்மீனியா தேசத்தில் இவ்விரண்டு வருஷத்தில் நடந்திருக்கும் கொடுமை, பிராணவதை, மானபங்கத்தை நாவிலெடுக்க முடியாது. துருக்கி உத்தியோகஸ்தர் எடுத்துத் தங்கள் வீடுகளுக்குக் கொண்டுபோயிருக்கும் ஸ்திரீகளுக்குக்

கணக்கில்லை. ஏராளமானபேர் சந்தைகளில் மகம்மதியருக்கு விற்கப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானபேர் வேசித்தொழில் செய்யப் பலவந்தமாய்ப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறுவர், சிறுமிகள் எட்டு, பத்து ரூபாய்க்கு விற்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டிருக்கிறார்கள். பாலியர் மகம்மதியரால் வளர்க்கப்படும்படி மகம்மதிய மோல்விகள் கைவசம் சர்க்காரால் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

துருக்கியர் ஜெனானக்களிலும், மோல்விகள் பாடசாலைகளிலும், வேசிகள் வீடுகளிலும் பலவந்தமாய் வைக்கப்பட்டிருக்கும் அர்மீனியர்தவிர, அர்மீனியா தேசம் முழுவதிலும் தற்சமயத்தில் ஒரு அர்மீனியன்முதலாய் இல்லை. வாலிபர், வயோதிபர் பேதமின்றி சமூலமாய் அழிந்துபோனார்கள். சபை அதிகாரிகள் இரத்தசாட்சிகளாய் மரித்திருக்கிறார்கள். மேற்றிராணிமார் பலர் ஈட்டிகளால் குத்தப்பட்டிருக்கிறார்கள். சிலர் உயிரோடே தகனிக்கப்பட்டிருக்கிறார்கள்; தூக்கிப் போடப்பட்டிருக்கிறார்கள். குருமார் சிலுவையிலறையுண்டிருக்கிறார்கள். அர்மீனிய சபையின் பரிசுத்தவான்களின் இரத்தம் குடித்து துருக்கி வெறித்திருக்கிறது.

இந்த உபத்திரவம் ஆரம்பிக்கிறகாலத்தில் துருக்கிய ராஜாங்கத்துக்குள்ளிருந்த அர்மீனியர் தொகை 12 லக்ஷம். இதில் சுமார் 8 லக்ஷம்பேர் பட்டயத்துக்கு இரையானதாக மதிப்பு. சுமார் இரண்டு லக்ஷம்பேர் ருஷியாவுக்கும், சுமார் 4,000 பேர் எகிப்துக்கும் தப்பியோடிப் பிழைத்திருக்கிறார்கள். நாடற்று, வீடற்று, அலைந்துதிரியும் மீதியாயிருக்கிற இச்சிறுமந்தைக்குச் சகாயஞ்செய்யும்படி லண்டன் மாநகரில் ஓர் பண்டு ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள சபைகள் அனுப்பும் சகாயமும் இவர்களுக்கே அனுப்பப்படும்.

விசேஷித்த காணிக்கை அனுப்ப விரும்புவோர் குருமார் மூலமாய் தங்கள் தங்கள் மண்டல அத்தியக்ஷர்கள் ஆபீஸுக்கு அனுப்பலாம்.

THE WAR NEWS

யுத்த சமாசாரம்

ஐரோப்பாவின் மேல்பாகத்துச் சண்டை. ருஷியா ஜெர்மானியரோடு செய்த உடன்படிக்கையின்படி திரண்ட யுத்த சேனைகள் ருஷியாவின்மேல் படையெடுப்பதை விட்டுவிட்டபடியால் அச்சேனைகளெல்லாம் ஐரோப்பாவின் மேல்பாகச் சண்டையில்

பங்குபெற நேரிட்டிருக்கிறது. மார்ச்சுமாதக் கடைசியிலிருந்து ஒருகாலும் நேர்ந்திராத பெரிய யுத்தம் நடைபெறுகிறது. சத்துரு, ஆட்களின் மிகுதியால் சிலவிடங்களில் நம்முடைய சேனைகளை பின்னிட்டுப்போகச் செய்தபோதிலும் அவனுக்கு நேரிட்டிருக்கும் உயிர்ச்சேதம் பிரமிக்கத்தக்கது. இங்கிலாந்திலிருந்து சேனைகள் உதவிக்கு வந்தவாறுகவே இருக்கிறபடியால் தற்சமயம் நம்முடைய சேனைகளை அவர்கள் முறியடித்துவிடுவார்களென்று எண்ண நிமித்த மில்லை. ஓயாச்சண்டையால் உயிர்ச்சேதமதிகமாகாமல் அமெரிக்காவினுடைய உதவியை எதிர்பார்க்கிறோம். பிரசிடெண்ட் உவில்சன் யூனைட்டெட் ஸ்டேட்ஸ் படைகளையெல்லாம் இந்த பெரிய யுத்தத்துக்கு அனுப்பி ஜெயங்கிடைக்கும்வரை யுத்தஞ்செய்ய தீர்மானித்திருப்பது மேற்குக் கண்டத்தின் யுத்த தீர்மானத்தை வெளிப்படுத்துகிறது. பாரீசைப் பிடிக்கும்படியாக சத்துருக்கள் தகுந்த ஆயத்தத்தோடே வந்தும் சரியாகத் தடுக்கப்பட்டார்கள். இது விஷயத்தில் நம்முடைய ஆகாயவாகன யுத்தவீரர்கள் காட்டியிருக்கும் வீரமும் பராக்கிரமமும் வியக்கத்தக்கது. சத்துருவின் ஆகாய வாகனங்களில் அநேகம் கீழே வீழ்த்தப்பட்டன. ஆகாயத்திலிருந்து சத்துருக்களின் சேனைகளோடு சண்டைசெய்ததே இதுவரை நாம் எதிர்த்து நிற்கத்தக்க சக்தியாயிற்று. வெகுதூரம் குண்டுகளை யனுப்பக்கூடிய பீரங்கிகளால் பாரீஸ் தாக்கப்பட்டுவருகிறது. அவைகள் சுடப்பட்டவுடனே நமது பீரங்கிகளும் ஆகாயவாகனங்களும் அவைகளைக் கண்டுபிடித்து உடைக்க முயலுகின்றன. ஒரு பீரங்கி தானுகவே வெடித்துவிட்டது.

பலஸ்தீனுச் சண்டை. எருசலேம் பட்டணம் பிடிபட்டதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பலஸ்தீனுவில் இதுவரை ஜெயங்கிடைத்துக்கொண்டே வருகிறது. ஜெயிக்கப்பட்ட தேசங்களில் ஜனங்கள் குடியேறி சந்தோஷமாய் வாழ்ந்துவருகிறுர்கள். அராபியர் ஆங்கிலேயருடைய பட்சத்தையும் அனுதாபத்தையுமறிந்து துருக்கியரோடு யுத்தஞ்செய்துவருகிறுர்கள்.

மெசோபொத்தேமியாச் சண்டை. இவ்விடத்தில் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட சேனைகள் மிகுந்த பராக்கிரமத்தோடு சண்டைசெய்து ஜெயித்திருக்கிறுர்கள். ருஷியர் வடபாகத்தில் பிடித்த நாடுகளையெல்லாம் விட நேரிட்டிருக்கிறது. துருக்கியர் அர்மீனியா தேசத்துக்குள் புகுந்து மறுபடியும் அநேக ஆயிரஞ் ஜனங்களைக் கொன்றுபோட்டது பெரிய பரிதாபமே. ருஷியர், நடந்துவரும் அக்கிரமத்தைப்பற்றி ஜெர்மானியரிடம் குறை கூறியிருக்கிறுர்கள்.

ஜப்பான். விலாடிவாஸ்டாக்கிலிருக்கும் ஜப்பானிய குடும்பங்களிற் சிலவற்றை ருஷியர் துன்பப்படுத்தியபடியால் ஜப்பானிய படையும் பிரிட்டிஷ் படையும் அங்கே யிறங்கி காவல்காத்து வருவதாகத் தெரியவருகிறது.

சப்மரீன் சண்டை. நீரில் மூழ்கும் கப்பல்களால் நடந்துவருஞ் சண்டையை இன்னும் ஜெர்மானியர் நிறுத்தவில்லை. தரையில் மும்முரமாய் நடந்துவரும் யுத்தத்தினிமித்தம் அது ஒருவாறு குறைந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். வேளாவேளைகளில் பெல்ஜியத்துக்குப் போகும் போஜனக் கப்பல்களையும் உடைத்துவருகிருர்கள். அமெரிக்கா பல தேசங்களிலிருந்து கப்பல்களை வாங்கி உபயோகித்துவருகிறபடியாலும் பல புது கப்பல்கள் கட்டப்பட்டு வருகிறபடியாலும் சப்மரீன் மூலம் செய்யப்படும் நஷ்டம் அதிகமென்று சொல்ல ஏதுவில்லை. ஒரு காலத்தில் சப்மரீன் மூலஞ் ஜெயிக்கலாமென்ற மனோபாவம் போய்விட்டாற்போலத் தோன்றுகிறது.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆ மேமீ

1	பு.	சங்.	132.	1—18
2	வி.	,,	133.	1— 3
			134.	1— 3
3	வெ.	எபே.	1.	1—14
4	ச.	,,	1.	15—23
5	ஞா.	,,	2.	1—10
6	தி.	,,	2.	11—22
7	செ.	,,	3.	1—12
8	பு.	,,	3.	13—21
9	வி.	,,	4.	1—16
10	வெ	,,	4.	17—32
11	ச.	எபே.	5.	1—16
12	ஞா.	,,	5.	17—33
13	தி.	,,	6.	1—12
14	செ	,,	6	13—24
15	பு	சங்	64.	1—10
16	வி.	,,	65	1—18
17	வெ.	,,	66.	1—20
18	ச.	,,	67.	1— 7
19	ஞா	,,	68.	1—18
20	தி.	,,	68.	19—35
21	செ.	தீத்.	1.	1—19
22	பு.	,,	2.	1—15
23	வி.	,,	3.	1—15
24	வெ.	பிலே.		1—14
25	ச.	,,		15—25
26	ஞா.	1 இரா.	1.	15—31
27	தி.	,,	1.	32—49
28	செ.	,,	3.	1—15
29	பு	,,	4	20—34
30	வி.	,,	5.	1—18
31	வெ.	,,	6.	1—14

C. L. S. PRESS, MADRAS—1918